
பெருகும் குற்றங்கள்...
சறுக்கும் காவல்துறை...
என்ன செய்யப் போகிறார்
முதல்வர்?

● வெ.நீலகண்டன்


02.04.2025

அந்த வீடியோக்களைப் பார்க்கவே பதைபதைப்பாக இருக்கிறது. ஈரோட்டு நெடுஞ்சாலையில் ஒருவரை காருக்குள் வைத்து வெறியோடு ரவுடிகள் வெட்டிச் சாய்ப்பதைப் பார்த்து அவர் மனைவி அச்சத்தில் அலறுவது இதயத்தை நடுங்க வைக்கிறது.

புதுக்கோட்டையில் கனிமவளத்தைக் காக்கப் போராடிய ஜெகபர் அலியை சொல்லிவைத்துக் கொலை செய்திருக்கிறார்கள். பொதுச் சொத்தைப் பாதுகாக்கப் போராடிய திருநெல்வேலி முன்னாள் காவல்துறை அதிகாரி ஜாகிர் உசேன், கொலை மிரட்டல் வருவதாக வீடியோ வெளியிட்ட சில நாள்களில் துள்ளத்துடிக்க வெட்டிக் கொலை செய்யப்படுகிறார்.

வடசென்னைத் தொழிற்சங்கப் பிரமுகரைக் காரிலேயே கடத்திச் சென்று கொன்று புதைக்கிறது ஒரு கும்பல்.

காவல்துறை ரவுடிகளையும் கொலைகாரர்களையும் காலில் சுட்டும் கையை முறித்தும் கைது செய்து கொண்டிருக்கும்போதே, சர்வசாதாரணமாக பொதுவெளிகளில் கொத்திக் குதறிக்



கொண்டிருக்கிறார்கள் கூலிப்படையினர். பள்ளிக்கூட வாசலிலேயே குழந்தைகளைக் கடத்த முயல்கிறார்கள். நீதிமன்ற வாசலிலேயே கொலை செய்கிறார்கள்.

'குற்றங்கள் அதிகரித்துவிட்டன' என்று சட்டசபையில் அ.தி.மு.க எழுப்பிய பிரச்னைக்கு புள்ளிவிவரங்களைத் தந்து வாயடைத்துவிட்டது தமிழக அரசு. ஆனால் எண்ணிக்கைகளைக் கடந்து குற்றங்களின் தன்மை, பொதுமக்களை எப்போதுமில்லாத பதற்றத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது. குற்றமிழைப்பவர்கள் முகத்தில் தயக்கமோ, அச்சமோ இல்லை. வெற்றிப் பெருமிதம் ததும்புகிறது.

நடமாட்டம் இல்லாத பகுதிகளில் ரவுடிகள் அடித்துக்கொண்டு சாவது எப்போதும் நடக்கும்தான். பொதுவெளிகளில் இப்படி ஆயுதம் தரித்து சம்பவம் செய்யும் அளவுக்கு எங்கிருந்து வருகிறது தைரியம் இவர்களுக்கு? உளவுப்பிரிவு, குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவு என இதற்கென இருக்கும் பிரிவுகளின் பணிகள்தான் என்ன?

"இது வெறும் சட்டம் ஒழுங்குப் பிரச்னை மட்டுமல்ல. இதன் பின்னால் நம் விசாரணை, நீதிப் பரிபாலன முறையின் சிக்கல்கள் இருக்கின்றன" என்கிறார் வழக்கறிஞர் மில்டன்.

"தனக்கு ஒருவன் தீங்கிழைத்தால் அதே மாதிரி அவனுக்குத் தீக்கிழைக்க வேண்டும் என்பது இயல்பான மனித சிந்தனை. 'நீயும் போய் பதிலுக்குத் தீங்கிழைத்துக் குற்றவாளியாகாதே, தீங்கிழைத்தவனுக்கு நாங்கள் தண்டனை வழங்குகிறோம்' என்பதுதான் நம் நீதி பரிபாலன முறையின் முக்கிய அம்சம். அது சரியாக நடந்துவிட்டால், யாரும் அரிவாள் தூக்க மாட்டார்கள். நடக்காவிட்டாலோ, தாமதமானாலோதான் பதில் நடவடிக்கையில் இறங்குகிறார்கள்.


சமீபத்தில் நடந்த நிறைய கொலைகள் பழிக்குப் பழிதான். காருக்குள் வைத்து ஒருவர் வெட்டப்படுகிறார். வெட்டியவரைப் பழிவாங்க வெட்டப்பட்டவரின் நண்பர்கள் காருக்குள் வைத்து அதே மாதிரி வெட்டுகிறார்கள். இது ஈரோட்டில் நடந்தது. மதுரையில் 20 ஆண்டுகளாக இரு குடும்பங்களுக்கு இடையில் தொடரும் பகையால் சமீபத்தில் 20-வது கொலை நடந்திருக்கிறது.

குற்றமிழைத்தவருக்கு தகுந்த வரம்புக்குள் தகுந்த தண்டனை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையை உருவாக்கிவிட்டால் இதுபோன்ற குற்றங்களைக் குறைத்துவிடலாம்" என்கிறார் மில்டன்.

எளிய மக்கள் அணுகும் விதத்தில் இல்லை என்பது காவல்துறைமீது காலங்காலமாக வைக்கப்படும் விமர்சனம். பின்புலமற்ற மனிதர்கள் காவல் நிலையத்தில்



மில்டன்



ஹென்றி டிபேன்



பிரம்மா பாலசுப்பிரமணியம்



லஜபதிராய்



ராமசுப்பிரமணியம்

நீதிபெறுவதே சவாலாக மாறிவிட்டதாக வருந்துகிறார்கள் செயற்பாட்டாளர்கள். ஜாகீர் உசேன் சம்பவத்தில் குற்றம் சாட்டப்படும் இரண்டு காவல்துறை அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டார்களே ஒழிய, இதுவரை கைது செய்யப்படவில்லை. காவல்துறையின் இந்த மௌனம் பொதுச் சமூகத்தை மேலும் அச்சமூட்டுகிறது.

“காவல்துறை யாருக்குமே பதில் சொல்ல அவசியமில்லாத சூழல் இங்கே உருவாகிவிட்டது. முதல்வரின் பொறுப்பில் இருக்கிறது காவல்துறை. இந்த நான்காண்டுகளில் எத்தனையோ நிறுவனங்களில் அவர் ஆய்வு செய்திருக்கிறார். காவல் துறையில் ஆய்வு செய்திருக்கிறாரா..?” என்று கேள்வியெழுப்புகிறார் மனித உரிமைச் செயற்பாட்டாளரும் வழக்கறிஞருமான ஹென்றி டிபேன்.

‘‘காவல்துறையில் பணிபுரிபவர்களைக் கேள்வி கேட்கக்கூடிய நிலையில் உயர் அதிகாரிகளும் இல்லை, முதலமைச்சரும் இல்லை. நீதித்துறையும் அமைதியாக இருக்கிறது. பத்திரிகைகளில் வருகிற செய்திகளை நீதிபதிகள் பார்க்கிறார்களா? மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது தானாகவே முன்வந்து நீதிமன்றம் தலையிட வேண்டும்.

ஸ்டெர்லைட் சம்பவத்தில் போலீஸ் அத்துமீறல் நடந்தபோது, மாஜிஸ்ட்ரேட் களத்தில் இறங்கினார். ஒவ்வொரு காவல் நிலையமாகப் போய் ஆய்வுசெய்து சட்ட விரோதக் காவலில் வைக்கப்பட்டவர்களை விடுவிக்கச் செய்தார். 2020-ல் ஒரு காவல் நிலைய மரணம். இறந்த பையனின் அப்பாவிடம் பேசி வழக்கை முடித்துவிட்டார்கள். உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் கவனத்துக்கு அதைக் கொண்டு சென்றபிறகு வழக்கு தூசி தட்டப்பட்டு இப்போது ஏழு காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு நிலுவையில் இருக்கிறது. இப்படி, நிறைய முன்னுதாரணங்கள் உள்ளன. முதலமைச்சரும் உயரதிகாரிகளும் மௌனம் சாதிக்கும்போது நம்முன் இருக்கும் நம்பிக்கை நீதிமன்றங்கள் தான்” என்கிறார் ஹென்றி டிபேன்.

வழக்கறிஞர் பிரம்மா பாலசுப்பிரமணியம், சிறைச்சாலைகளை மறுசீரமைப்பு செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

“கூலிப்படையினர் இன்று எவ்வித அச்சமும் இல்லாமல் பொதுவெளியில் கொலைச் சம்பவங்களில் ஈடுபடுகிறார்கள். கேஸ் வாங்குவது அவர்களுக்குப் பெரிய தகுதியாக மாறியிருக்கிறது. சிறைச்சாலைகளில்தான் இப்படியான இளைஞர்கள் ஒருங்கிணைகிறார்கள். சிறைக்குள் இருக்கும் அதிகாரிகள் துணையின்றி இதைச் செய்வது சாத்தியமில்லை. சிறு சிறு குற்றங்கள் செய்துவிட்டுச் சிறைக்குச் செல்பவர்கள் அங்கு கிடைக்கும் தொடர்புகளால் கொலை செய்யும் அளவுக்கு மாறிவிடுகிறார்கள். தமிழகம் முழுவதும் இந்தக் கூலிப்படை நெட்வொர்க் விரிந்துவிட்டது.

சிறு குற்றங்கள் செய்து சிறைக்குச் சென்றவர்கள் மேல், சிலநேரங்களில் தவறே செய்யாதபோதும் அடுத்தடுத்து வழக்குப் போடுவதால் அவர்கள் ஏதேனும் ஒரு நெட்வொர்க்கில் இணைந்து நிரந்தரக் குற்றவாளி ஆகிவிடுகிறார்கள். சிறைச்சாலையின் கண்காணிப்பை அதிகப்படுத்துவதோடு சிறையில் இருந்து வெளியே வருபவர்களை நல்வழிப்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்க வேண்டும்” என்கிறார் அவர்.

‘‘1970-களில் எல்லாம் யாரேனும் கொலைக்குற்றத்தில் ஈடுபட்டால் ‘ஐயோ, தூக்கில் போட்டுக் கொன்றுவிடுவார்களே’ என்று உறவினர்கள் பதறுவார்கள். இது இந்தியக் குடிமக்கள் மீது பிரிட்டிஷ் நிர்வாகம் ஏற்படுத்திய அச்சம். ஒருவன் 18 வயதுக்குக் கீழான ஒரு பெண்ணைப் பாலியல் வன்முறை செய்கிறான் என்றால், அந்தப் பெண் புகார் செய்வாள்... அது வாழ்க்கையையே அழித்துவிடும் என்பது அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இந்தக் குற்றத்தைச் செய்தால் இந்தத் தண்டனை கிடைத்தே தீரும் என்ற விழிப்புணர்வை எல்லா


ஜாங்கிட்

மட்டத்திலும் உருவாக்க வேண்டும்.

கொலை, பாலியல் வன்முறை, போதைப்பொருள் கடத்தல் மூன்றும் சமூகத்தில் நடக்கும் மோசமான குற்றங்கள். இந்த மூன்று குற்றங்களிலும் ஒருவன் சிக்கிவிட்டால் அவன் வாழ்க்கை முடிந்தது என்ற பயம் குற்றவாளிகளுக்கு மட்டுமல்ல, பொதுச் சமூகத்துக்கும் வரவேண்டும்.

இன்று போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்துவிட்டது. தமிழகத்தில் நடக்கும் பெரும்பாலான குற்றங்களில் போதைப்பொருள் முக்கிய இடத்தை வகிக்கிறது. பொறுப்பற்ற ஓர் இளைஞர் சமூகத்தை அது உருவாக்கியிருக்கிறது. அவர்களுக்கு உயிர் பயமே இல்லை. சட்டத்தைக் காட்டியோ தண்டனையைக் காட்டியோ அவர்களைத் தடுக்க முடியவில்லை. அவர்கள்தான் சமூகத்துக்கு அச்சுறுத்தல். இவர்களின் பின்னணியை ஆய்வு செய்யவேண்டும்.

எல்லாக் குற்றங்களையும் காவல்துறை களத்துக்குப் போய்த் தடுக்க முடியாது. ஆனால் வழக்கைத் துரிதமாக நடத்தி தண்டனை வாங்கித்தர முடியும். இங்கே வழக்குகள் முடிவுக்கு வர பெரும் காலதாமதமாகிறது. பாதிக்கப்பட்டவர்கள் நம்பிக்கை இழந்துவிடுகிறார்கள். தமிழக அரசு இதற்கென ஒரு குழுவை நியமிக்க வேண்டும். வழக்குகளைத் துரிதப்படுத்துவதில் என்னென்ன இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்தால்தான் தீர்வைத் தேட முடியும்.

நீதிமன்ற விசாரணை நடைமுறைகள் இன்னும் அந்தக் காலத்திலேயே உள்ளன. வழக்கு ஆவணங்கள் தயாரிப்பது தொடங்கி விசாரணை நடைமுறைகள் வரை எல்லாவற்றிலும் காலதாமதம். ஆவணங்களில் எது தேவையோ அதை எழுதினால் போதும் என்று சொல்லலாம். தேவையற்ற சுமையைக் குறைத்தாலே நீதிமன்றத்துக்கும் வழக்கறிஞர்களுக்கும் காவல்துறைக்கும் நிறைய நேரம் கிடைக்கும்.

கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்து 90 நாள்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துவிட வேண்டும் என்று வரம்பு இருக்கிறது. ஆனால் ஒரு வழக்கை இத்தனை மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என்று எந்த வரம்பும் இல்லை. ஓராண்டுக்குள் நீதிமன்றத்தில் விசாரணை முடிந்து தண்டனை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை உருவானால் கொலைகள் பெருமளவு குறைந்துவிடும்...” என்கிறார் மில்டன்.

வழக்கறிஞரும் செயற்பாட்டாளருமான லஜபதிராய், “சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைச் சரி செய்யாமல் குற்றம் சாட்டப்பட்டவர்கள் காலில் சுடுவதாலும் கையை முறிப்பதாலும் குற்றங்களைக் குறைத்துவிட முடியாது'' என்கிறார்.

“அப்படி எல்லோரையும் காவல்துறையால் சுடமுடியாது. குற்றம் சாட்டப்பட்ட பலர் வெளியில் நடமாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். தி.மு.க, அ.தி.மு.க எந்த ஆட்சியாக இருந்தாலும் 24 மணி நேரமும் வேலை செய்கிற ஒரு நிலையற்ற அமைப்பாகத்தான் காவல்துறை இருக்கிறது. அருகிலிருக்கும் கேரளாவில் காவல்துறைக்கு சங்கம் இருக்கிறது. தமிழகத்தில் இல்லை. அங்கு பணி நேரம் இருக்கிறது, இங்கு அதுவும் இல்லை. இங்கே சட்டம் ஒழுங்கில் பிரச்னைகள் இருக்கலாம். ஆனால் வட இந்தியா அளவுக்கு தமிழகத்தில் பொது ஒழுங்கு பாதிக்கப்பட வில்லை” என்கிறார் லஜபதிராய்.

காவல்துறைமீதான விமர்சனங்கள் குறித்து முன்னாள் காவல்துறைத் தலைவர் டாக்டர் எஸ்.ஆர்.ஜாங்கிட்டிடம் பேசினோம்.

‘‘குற்றங்கள் அதிகரித்ததா, குறைந்துள்ளதா என்பது பற்றிய புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. காவல்துறை ஆய்வாளர்கள், கீழ்நிலை அதிகாரிகள் சட்டம் தந்திருக்கிற உரிய அதிகாரத்தோடு பணியாற்றும் சூழலை உருவாக்கி, அவர்கள் பெறும் புகார்கள்மீது எந்த ஒப்புதலுக்கும் காத்திருக்காமல் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி செய்தால் காவல்துறையின் நிலை மேலும் மேம்படும்” என்றார் அவர்.

காவல்துறையின் பணிகளைச் செம்மைப்படுத்தும் நோக்கில், நீதியரசர் சி.டி.செல்வம் தலைமையில் 2022-ம் ஆண்டு 5-வது காவல் ஆணையத்தை அமைத்தது தமிழக அரசு. அந்த ஆணையம் கடந்த ஜனவரி 3-ம் தேதி தனது அறிக்கையை முதல்வரிடம் அளித்தது. அந்த ஆணையத்தின் உறுப்பினரான மனநல மருத்துவர் ராமசுப்பிரமணியத்திடம் இதுகுறித்துப் பேசினோம்.

“இன்று நடக்கும் பெரும்பாலான கொலைகள் பகையுணர்வில் நடப்பவை. ஆனால் திருநெல்வேலியில் நடந்ததோ, முன்பு சாத்தான்குளத்தில் நடந்ததோ ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

இதுமாதிரித் தவறிழைக்கும் காவலர்கள்மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இடம் மாற்றுவதாலோ தற்காலிகமாக நீக்கி வைப்பதாலோ பயனில்லை. அவர்களுக்கு தீவிரமான மனநல சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். அவர்களைத் தொடர்ந்து கண்காணிக்கவும் வேண்டும்.

சமீபகாலமாக நடக்கும் கொலைச் சம்பவங்களை வெறும் சட்டம் ஒழுங்குப் பிரச்னையாக மட்டும் பார்க்க முடியாது. இன்றுள்ள இளைஞர்களுக்குத் தோல்வியையோ கஷ்டத்தையோ தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவம் இல்லை. இன்று மனிதருக்கு மனிதர் பேசுவதே குறைந்துவிட்டது. மொபைலையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பிள்ளைகளைக் கவனிக்க பெற்றோருக்கு நேரம் இல்லை. எல்லோருமே ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். பள்ளிகளிலும் கூட பிள்ளைகளுக்குப் பொறுப்பேற்கும் ஆசிரியர்கள் குறைந்துவிட்டார்கள்.



எந்தக் குணக்கேடும் ஒரே நாளில் ஏற்படுவதில்லை. குடும்பச்சூழல், சமூகச்சூழல் இரண்டுமே மெல்ல மெல்ல இளைஞர்களை பாதிக்கிறது. கோபத்தை, உணர்வுகளைக் கையாளத் தெரியாமல் பிள்ளைகள் வளர்கிறார்கள். போதைப் பொருள்களும் இன்று எளிதாகக் கிடைக்கிறது. பிள்ளைகள் தடம்மாற நம்மைச்சுற்றி இவ்வளவு காரணங்கள் இருக்கின்றன.

முன்பெல்லாம் திருடுவது கடினமான விஷயமாக இருந்தது. இன்று ஒரு செல்போனை வைத்து ஐந்து நிமிடத்தில் லட்சங்களில் திருடி விடுகிறார்கள். முன்பு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலும் 40, 50 வயதுகளில் இருப்பார்கள். இன்று சிறுவர்கள் பெருமளவில் குற்றச்செயல்களில் ஈடுபடுகிறார்கள். அவர்களுக்குத் தண்டனை குறைவு என்பது முக்கியக் காரணம். அதனால் திட்டமிட்டு சிறுவர்களைக் குற்றச் செயல்களில் ஈடுபடுத்துகிறார்கள். அறியாமல் சிறு குற்றம் செய்து சீர்திருத்தப் பள்ளிக்குச் சென்று திரும்புகிற பிள்ளைகளைக் கண்காணித்து நல்வழிப்படுத்த நம்மிடம் சரியான திட்டங்கள் இல்லை. ஆனால் குற்றவாளிகள் சரியாக அவர்களை வசியம் செய்து தடம் மாற்றிவிடுகிறார்கள்.

நான் 50 ஆண்டுகளாக உளவியல் மருத்துவராக இருக்கிறேன். நோயாளிகளின் எண்ணிக்கை இன்று பெருமளவு அதிகரித்திருக்கிறது. இந்தியாவில் 10.6% மக்கள் தீவிரமான மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்கிறது ஒரு ஆய்வு. ஆனால் மனநல மருத்துவர்கள், உளவியல் ஆலோசகர்கள் மிகக்குறைவு. பாதிக்கப்பட்டவர்களை ஆற்றுப்படுத்த போதிய ஏற்பாடுகள் இல்லை. குற்றங்களுக்கும் மனநலத்துக்கும் நிறைய தொடர்பு உண்டு. காவல்துறையையும் மனநலப் பிரச்னை பாதிக்கிறது. பெரும்பாலான காவலர்கள் *Stress-related disorders* பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

காவல் பணிகள் செம்மைப்பட வேண்டுமெனில் இன்றைய மக்கள்தொகை, குற்றங்களின் எண்ணிக்கை, தன்மைக்கு ஏற்ப காவலர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். காவல் நிலையத்தில் தொழில்நுட்ப வசதிகளையும் மேம்படுத்த வேண்டும். காவலர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படவேண்டும். மேலும் காவலர்களின் மனநிலை, உடல்நிலை என்பது மிகவும் முக்கியமானது. அதற்கும் முக்கியத்துவம் தரவேண்டும். காவலர்களின் குடும்ப நலன் மீதும் கவனம் கொள்ள வேண்டும். இந்த விஷயங்களை எல்லாம் நாங்கள் ஆணைய அறிக்கையில் அழுத்தமாகப் பரிந்துரைத்திருக்கிறோம்...'' என்கிறார் ராமசுப்பிரமணியம்.

மக்கள் அச்சமின்றி நிம்மதியாக வாழ வேண்டும்... அதற்குத்தான் அரசு, காவல்துறை, நீதிமன்றம் எல்லாம். குற்றங்களைப் புள்ளி விவரங்களில் தேடாமல் வன்முறையற்ற தமிழகத்தை மாற்ற அரசு உறுதியேற்க வேண்டும். காவல்துறைமீது மக்களுக்கு வரவேண்டியது நம்பிக்கையும் மரியாதையும்தான்; அச்சமல்ல. காவல்துறைக்குப் பொறுப்பான முதலமைச்சர் தீவிரமாக கவனம் கொள்ள வேண்டிய பிரச்னை இது!

வி